இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி

(ஓர் நிலைமை விளக்கம்)

பெரியார் ஈ.வெ.ரா

உண்மை விளக்கம் பதிப்பகம்.
சென்னை

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி

(ஓர் நிலைமை விளக்கம்)

க-மு-பலராமன்

மு-பலராமன்

M-பலராமன்

பெரியார் ஈ. வெ. ரா.

3/7/60

உண்மை விளக்கம் பதிப்பகம்

சென்னை.

முதற் பதிப்பு—மார்ச் 1965

கல்விப் பிரகாசம் பிரஸ்,
சென்னை—5

அறிமுகம்

அண்மையில் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளைப் பற்றிப் பெரியார் திரு. ஈ. வெ. ராமசாமி அவர்கள் வெளியிட்டுள்ள சில தகவல்களையும், கருத்துக்களையும் ஒரு நூலாகத் தொகுத்துத் தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியோடு அளிக்கிறோம்.

தந்தை பெரியார் அவர்களின் எல்லாக் கருத்துக்களும் எமது பதிப்பகத்திற்கு உடன்பாடு அல்ல என்றாலும் இதை வெளியிட முன்வந்ததற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. முதன்முதலில், 1938-ஆம் ஆண்டில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைத் தொடங்கியவரே பெரியார் அவர்கள்தாம். இப்பொழுது இந்தி எதிர்ப்பு என்ற பெயரில் நடைபெற்ற கிளர்ச்சியின் உள்நோக்கங்களைப் பற்றி சில முக்கியமான தகவல்களையும் கருத்துக்களையும் அவர்கள் கூறியுள்ளார்கள்.

அவற்றைத் தமிழ் அறிந்த நல்லுலகம் படித்துப் பயனடைய வேண்டுமென்பதே எங்களது பணிவான வேண்டுகோள்.

பதிப்பகத்தார்

குறிப்பு :—கட்டுரைகளில் ....என புள்ளிகள் வைத்துள்ள இடங்கள் வகுப்புவாதிகளை பெரியார் குறிப்பிடுவன.

1

அடக்குமுறைதான் அராஜகத்திற்கு பரிகாரம்!

(8—2—65 தேதிய "விடுதலை")

மக்களின் நலத்திற்காக எந்த அரசாங்கத்திற்கும் அடக்குமுறை என்ற ஆயுதம் இருந்தே ஆகவேண்டும்.

அடக்குமுறை இல்லாத ஆட்சி 'அனர்க்கிசம்' (Anarchism) குழப்பமும், காலித்தனமும் கொண்ட தன்னரசு ஆட்சியேயாகும். அடக்குமுறை இல்லாத ஆட்சி சர்வாதிகார ஆட்சியைவிடக் கேடான ஆட்சியேயாகும். அடக்குமுறை இல்லாத ஆட்சி அநாகரீக ஆட்சியேயாகும்.

ஜனநாயக ஆட்சியில் சரியான அடக்குமுறை இல்லையானால் அந்த ஆட்சி கடும் புலி முதலிய துஷ்ட மிருகங்கள் வாழும் காடுபோன்ற நாடேயாகும்.

கிளர்ச்சியின் நோக்கம் ஆட்சியைக் கவிழ்ப்பதே

இன்று நடைபெற்று வரும் கிளர்ச்சி இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி என்று பெயர் சொல்லப்பட்டாலும் அது அரசாங்கத்தை அடுத்த தேர்தலில் தோற்கடித்து ....னும் கண்ணீர்த்துளியும் பதவிக்கு வரவேண்டும் என்கின்ற உள் எண்ணத்தின் மீது அறியாத மாணவர்களை ஏவிவிட்டு நடத்தும் கிளர்ச்சியேயாகும்.

இந்தியைப்பற்றி கிளர்ச்சிக்காரர்கள் எவருக்கும் கவலே இல்லே. அது ஒரு சாக்காக பயன்படுத்தப்படுகிறது

கிளர்ச்சிக்கு ....னர் பத்திரிகைகள் ஆதரவு

இக்கிளர்ச்சிக்கு எல்லா பத்திரிகைகளும் ஆதரவு தருகின்றன!

.........னர் சமுதாயம் முழுவதும் ....ன அதிகாரிகளும் ....ன ஆசிரியர்களும் நல்ல ஆதரவு தந்து தூண்டுதலும் செய்து வருகிருர்கள்.

இவை ஒருபுறமிருந்தாலும் சென்னே அரசாங்கம் இக்கிளர்ச்சிக்கு நல்லவண்ணம் வசதி அளித்து வருகிறது என்று சொல்லத்தக்க வண்ணம் நடந்து கொள்ளுகிறது. கிளர்ச்சியின் போக்கிற்கு அரசாங்க நிலேமையைத் தெரிந்துகொண்டே திட்டம் வகுத்து நடத்துகிற மாதிரியே காணப்படுகிறது.

கிளர்ச்சி துவக்கத்தில் நான் அரசாங்கத்திற்கு யோசனே சொல்லும் முறையில் என் கருத்தை தெரிவித்தேன்.

அதாவது,

“கண்ணீர்த்துளிகள் 26-ந்தேதியை துக்க தினமாகக் கொண்டாடினுல் அதை லட்சியம் செய்யாமல் விட்டுவிடுவது நல்லது”

“இல்லாவிட்டால் கடினமான அடக்குமுறையைக் கையாள வேண்டும்” என்று சொன்னேன். ஜனநாயகம் என்று கருதி அரசாங்கம் இரண்டும் செய்யாமல் கிளர்ச்

சிக்காரர்களைத் தூண்டிவிடுவதற்குப் பயன்படும்படி கண்ணீர்த்துளிக் கட்சி தலைவர்கள் என்று சொல்லப் பட்ட சிலரை பாதுகாப்பு என்னும் பேரால் பிடித்து வைத்தது; இது கிளர்ச்சிக்காரர்களுக்கு "அரசாங்கம் நம்மை ஒன்றும் செய்யாது என்கின்ற தைரியத்தைக் கொடுத்ததுடன் நாம் எப்படி நடந்தாலும் நமக்கு ஒன்றும் தொல்லை வராது" என்று தங்களைத் தைரியம் செய்துகொண்டு காலித்தனமான திட்டங்களை வகுக் கத் துணிவு கொண்டுவிட்டார்கள். போலீசும் ஒரு திட்டவட்டமான கொள்கையின் பேரில் தொண்டாற்ற முடியாதவர்களாகி விட்டார்கள்.

ஆட்சி பலவீனமாகிவிட்டதா?

இந்த நிலை பொதுமக்கள், மாணவர்கள், கிளர்ச்சிக் காரர்கள் உள்ளத்தில். "அரசாங்கம் பலமற்றதாகி விட்டது. இந்த அரசாங்கத்தால் நம்மை ஒன்றும் செய்ய முடியாது" என்ற எண்ணத்தை ஏற்படுத்தி விட்டது; இப்போது அரசாங்கத்திற்கு வேடிக்கை பார்ப்பதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு விட்டது.

"கிளர்ச்சி செய்தால் அப்படிச் செய்வோம் இப்படிச் செய்வோம்" என்று வீரசொற்களைப் பொழிந்த அரசாங் கம் கிளர்ச்சியை அடக்கத்தக்க காரியம் எதையுமே செய்யவில்லை. கிளர்ச்சியால் கலவரத்தால் பள்ளிகளை மூடிவிட்டதால், மாணவர்களுக்கும் அவர்கள் பலருக்கு கிளர்ச்சியில் ஈடுபடுவதைவிட வேறு வழியில்லாமல் போய்விட்டது. அதிகாரிகளுக்கும் கிளர்ச்சியை அடக்குவதை விட்டு "கிளர்ச்சி அமைதியாய் நடந்தால்

போதும்'' என்கின்ற நிலையைப் பின்பற்றவேண்டிய வர்களாகி விட்டார்கள்.

கடும் அடக்குமுறையே பரிகாரம்

இன்று பொதுமக்களுக்கு அரசாங்கம் பாதுகாக்கும் என்கின்ற நம்பிக்கை குறைந்து வருகிறது. யோக்கியமான பள்ளிநிர்வாகிகளும் பயப்படுகிறார்கள். இதனால் கிளர்ச்சிக்காரர்களுக்கு பயம் தோன்றுவதில்லை. ஒரு மாதம் பொறுத்து பள்ளிகளைத் திறந்தாலும் நிலைமையில் மாற்றம் ஏற்படுமா என்பது சந்தேகப்பட வேண்டியதாயிருக்கிறது. இன்றைய நிலைமையில் அரசாங்கத்திற்கு நிரந்தரமாய் கிளர்ச்சியை அடக்கவேண்டுமானால் ''சுதந்தரா கட்சியையும், கண்ணீர்த்துளி கட்சியையும் சட்ட விரோதமான கட்சி'' என்று பிரகடனம் செய்ய வேண்டும்.

பத்திரிகைகள் சட்டம் (''வாய்ப்பூட்டுச் சட்டம்'') கொண்டுவந்து பத்திரிகைகளின் விஷம, துரோக தூண்டிவிடும் கொள்கைகளை ஒழிக்க வேண்டும். தூண்டிவிட்டவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து புத்தி வரும்படியான தண்டனை கொடுக்க வேண்டும்.

தேர்தலுக்கு அஞ்ச வேண்டாம்

அடுத்த தேர்தலில் தோற்றுவிடுவோமோ என்ற பயம் இருக்குமானால் மக்கள் நலம் கருதி தேர்தலை ஒத்திப் போட்டுவிட வேண்டும். பொது நலத்தையும் அமைதியையும் சமாதானத்தையும் முன்னிட்டு இக்

காரியங்களை அரசாங்கத்தின் யோக்கியமான கடமை என்று கருதிச் செய்தாக வேண்டும்.

மக்கள் நன்மைக்காக செய்யப்படும் இக்காரியங்களால் காங்கிரஸ் அடுத்த தேர்தலில் தோல்வியுற்றாலும் அது காங்கிரசின் பெரிய தேசாபிமான, குடிகள் பாதுகாபபுக்கான தியாக காரியமே ஆகும். இப்படிச் செய்தால் காங்கிரஸ் தோற்றால், (தோற்காது; கண்டிப்பாய் தோற்காது) ....னும் காலிகளும்தான் ஆட்சிக்கு வருவார்கள். இரண்டொரு கூலிகளும் வரக் கூடும். இவர்களைக் கொண்ட அந்த ஆட்சி கண்டிப்பாய் ஒரு ஆண்டுக்குக்கூட நிலைக்காது. மக்கள் நல்ல அறிவு பெறுவார்கள்.

நிலைமையைத் தெளிவுபடுத்துக

இப்போது நாட்டில் அரசாங்கத்திற்கு பலம் குறைந்துவிட்டது. அரசாங்கம் சற்று கவலை எடுத்து இந்தி விஷயத்தில், எதிரிகள் மக்கள் இடையில் இந்த விஷயமாய் குழப்பத்தை உண்டு பண்ண இடமில்லாமல் ஆளுக்கொரு கருத்தை வெளியிட அனுமதிக்காமல்: இந்தி விஷயமாய் அரசாங்க கொள்கை, திட்டம், இன்னதுதான் என்பதை **வழி முறையில் உள்ளபடி** உண்மையை ஆதார பூர்வமாய் (அரசாங்க அறிக்கை மூலம்) வெளியிட்டுவிட வேண்டும் என்றும் காமராஜரை வேண்டிக் கொள்ளுகிறேன்.

2

உஷார்

(10—2—65 தேதிய "விடுதலை")

"கிளர்ச்சி" முற்றிவிட்டது. அப்படிச் சொல்வதன் அருத்தம் காலித்தனம் எல்லைத்தாண்டிவிட்டது.

இதற்குக் காரணம் நமது அரசாங்கம் தான்.

இன்று குடிமக்களுடைய உயிருக்கு, உடலுக்கு, உடமைகளுக்கு அரசாங்கப் பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டது.

நிர்வாகம் மக்களைக் காட்டிக்கொடுக்கும் நிர்வாகமாகி விட்டது.

காலிகள் மாணவர் வேடம் பூண்டு பஜாரில் பல கடைகளைக் கொள்ளை அடிப்பதுடன் தபால்பெட்டியை தெருவில் போட்டு உடைத்து சுக்கு நூறுக்கி அதற்குள்ளே இருந்த தபால், கடிதங்களைக் கிழித்து நெருப்பு வைத்து இருக்கிறார்கள்.

தபால் ஆஃபீசுக்குள் புகுந்து தபால் ஸ்டாம்புக்கு முத்திரை அடிக்கும் சீல் கைப்பிடிகள், ரிகார்டுகள் சூறையாடப்பட்டு. (திருச்சி) பாலக்கரையில் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. தபால் குமாஸ்தாக்களே ரிகார்டுகளை எடுத்துக் கொடுத்தார்களாம்.

நான் ரோட்டில் போகும்போது என் வண்டிக்குள் இருந்த என்னைப்பார்த்து நான்கு பக்கத்திலும் இருந்து வீசிய கற்கள் நான்குபுறத்திய கண்ணாடிகளையும் உடைந்து விட்டன. என்னுடன் வந்த நண்பர் ஒருவர் முன் சீட்டில் இருந்தவருக்கு கையில் நல்ல அடி. நூற்றுக்கணக்கான காலிகள் சர்க்கார் பஸ்ஸுக்கு

நெருப்பு வைக்க ஓடினார்கள். என் வண்டியையும் மோதி கல்லடி சரமாரியாய் வீசும்போது அங்கு ஒரு போலீசையும் காணமுடியவில்லை.

எனக்கு நேர்ந்ததைப்பற்றி நான் சிறிதும் வெட்கமோ கவலையோ கொள்ளவில்லை.

ஆனால் இப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்கு எனது நண்பர் ஆச்சாரியார் அவர்கள் சபாஷ் பட்டம் கொடுத்து பாராட்டி உற்சாகமூட்டினாரே அதை நினைத்தால் நாளைக்கு எனக்கு மாத்திரம் அல்ல; மற்ற பொது மக்களுக்கும், பொதுமக்களைப்பற்றிக் கவலை கொள்பவர்கள் கதியும் என்ன ஆகும் என்பது உண்மையில் நினைக்கவே பயமாக இருக்கிறது.

போலீசு மந்திரியும், முதல் மந்திரியும், ஐ. ஜி. யும் (I. G.)யும் ....னரல்லாதாராய் இருப்பதாலும் ஈடுபடும் மாணவர்கள் ....னரல்லாதாராயிருப்பதாலும் எனது நிலை சங்கடமாகி இந்த நிலைக்கு வரவேண்டியதாயிற்று.

எனது 60 ஆண்டு பொதுவாழ்வில் இவ்வளவு மோசமாக மக்களுக்கு பாதுகாப்பற்ற தன்மையில் ஒரு அரசாங்கத்தை நான் பார்க்கவில்லை.

3

இன்றைய மாணவர் கலகம்

(10—2—65 தேதிய "விடுதலை")

இன்னும் யார்யாருக்கு என்ன என்ன ஆபத்து வரப்போகிறதோ நினைக்கவே பயமாக இருக்கிறது.

இன்று நடைபெற்றுவரும் "மாணவர் கிளர்ச்சி" ....னர், ...னப் பத்திரிகைகள் ஆகியவற்றால் தூண்டி விடப்பட்ட கிளர்ச்சி என்பது யாவரும் அறிந்ததேயாகும். அரசாங்கமும் (காமராஜர்) இதைத் தெளிவாய் ஒப்புக்கொண்டிருக்கிறது. இதில் கிளர்ச்சிக்கு ஆக சொல்லப்படும் காரணங்களில் உண்மை "இருந்தாலும்" இல்லாவிட்டாலும், கிளர்ச்சிக்குக் காரணம் ....னர் போட்ட தூபமே, சதித்திட்டமேயாகும் என்பதும் அரசாங்கம் ஒப்புக்கொண்டதாகும்.

ஆட்சியைக் கவிழ்க்கும் சூழ்ச்சியே

.........னர்களுக்கு இன்றைய ஆட்சி மீது ஆத்திரம் ஏற்பட்டதற்குக் காரணம், அதாவது எந்தவிதமான அதர்ம (அயோக்கியத்தனமான) காரியங்களைச் செய்தாவது எப்படிப்பட்ட கீழ்த்தரமானவர் (அயோக்கியர்)களுடன் கூடியாவது இந்த அரசாங்கத்தை ஒழித்தாக வேண்டும். என்பதான ஒரு பழி வாங்கும் எண்ணம் தோன்றியதற்குக் காரணம் என்ன என்பதை மக்கள் முதலில் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அவை என்னவென்றால் ஆச்சாரியார் 1938ல் பதவிக்கு வந்தார், வந்தவுடன் 2500 பள்ளிக்கூடங்

களை மூடினார். பின் 1952ல் பதவிக்கு வந்தவுடன் (அதே ஆச்சாரியார்) 6000 பள்ளிக்கூடங்களை மூடி மீதி பள்ளிகளுக்கும் ஒரே நேரப்படிப்பாக்கி ஒவ்வொருமாணவனும் ஜாதித்தொழிலைப் படித்தாக வேண்டும் என்று (அரசாங்க) உத்தரவு போட்டார். [இவை உண்மையா அல்லவா என்பதை ஒவ்வொரு தமிழ் மகனும் மாணவனும் முடிவு செய்து கொள்ளவேண்டும்.]

தமிழ் மகன் ஆட்சியில்தானே தமிழர்க்கு கல்விப்பெருக்கம்?

இதன் பிறகு ஆச்சாரியார் பதவியில் இருந்து விலக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு அந்த இடத்திற்கு காமராஜர் வரவேண்டியதாகி,

காமராஜர் வந்தவுடன் இன்று இந்த நாட்டை 10 ஆண்டு காலத்தில் 100க்கு 10 பேராக படித்திருந்த மக்களை 100க்கு 40 பேராகப் படித்திருக்கிறார்கள் என்று ஆக்கினார்கள்!

9000 ஒன்பது ஆயிரம் அடி நிலைப் (பிரைமரி) பள்ளிகளை 30000 பள்ளிகளாகப் பெருக்கினார்!

400 உயர் நிலைப்பள்ளிகளை 2250 பள்ளிகளாக ஆக்கினார்!

40 கல்லூரிகளை இன்று 85 கல்லூரிகள் உள்ள நாடாக ஆக்கினார்.

மற்றும் மதுரையில் ஒரு பல்கலைக்கழகம் ஏற்படுத்தத்திட்டமிட்டு காரியங்கள் நடைபெறச் செய்து இருக்கிறார்.

இவைகள் உண்மையா அல்லது மிகைப்படுத்திக் கூறப்படுவனவா என்பதை தமிழ் மக்களும் மாணவர்களும் சிந்தித்து முடிவு செய்து கொள்ள வேண்டும்.'

காமராஜர் பதவிக்கு வந்தது முதல் ....னர் எதிர்ப்பு துவங்கிவிட்டது.

மற்றும் காமராஜர் பதவிக்கு வந்தது முதல் இந்த விநாடி வரை ....னர்கள் கட்டுப்பாடாக காங்கிரசையே ஒழிக்கத் திட்டமிட்டு சுப்ரீம் கோர்ட்டு முதல் எல்லா அரசாங்க ஸ்தாபனங்களும் காங்கிரஸ் ஆட்சிக்கு எதிரிடையாகவே வேலை செய்து வருவதோடு, கூடாநட்புக் கொண்டு குடியைக்கெடுப்பது என்கின்ற தன்மையில் "கண் கெட்ட குருடனுக்கு ஒரு இடி இடித்த சப்தத்தாலும் அதிர்ச்சியாலும் கண் வெளிச்சம் ஏற்பட்டது போல்" காமராஜர் ஆட்சி காரணமாக, இந்திய காங்கிரஸ் ஆட்சியின் கொள்கை சமுதாயத்திலும் பொருளாதாரத்திலும் சமதர்மக் கொள்கை (சோஷ்யலிசம்) என்பதாக ஆனதும் ....னர் நெருப்பில் விழுந்த புழு துடிப்பதுபோல் துடித்து எதைச் செய்தாவது இந்த (காங்கிரஸ்) ஆட்சியை ஒழித்துக் கட்டவேண்டும் என்கிற முடிவுக்கு வந்துவிட்டார்கள்.

சமதர்மத்தை வீழ்த்தும் ....னரின் முயற்சியே இக்கிளர்ச்சி.

.........னரின் இந்த முடிவு தான் இன்று நாட்டில் நடைபெறும் 'கிளர்ச்சிக்கும்' அராஜக காரியங்களுக்கும் ஒரே காரணமாகும்.

ஆட்சியாளர் கவனத்துக்கு

இந்த சமயத்தில் அரசாங்கம் நேர்மையான முறையில் நடந்து தீவிரமான நடவடிக்கைகளைக் கையாளாமல் தாட்சண்யம் பார்க்குமானுல் நாட்டை நாசமாக்கிய ‘ பாவம் ’ (குற்றம்) அவர்களையும் சேரும் என்றும், மற்ருெரு புறமும் பலாத்காரமும் நாச வேலையும் துவக்கமாகிவிடும், என்று பயப்படுவதாகவும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

4

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியும் செய்யப்போகும் சட்டமும்

(18—2—65 தேதிய "விடுதலை")

இந்தி விஷயமாய் தமிழ் நாட்டில் இந்தியாவுக்கு சுதந்தரம் கிடைப்பதற்கு முன்பிருந்தே அதாவது 1938-ம் ஆண்டிலிருந்தே கிளர்ச்சிகள் நடந்து வந்திருக்கின்றன.

........னர் புகுத்தியதே இந்தி சட்டம்

இக் கிளர்ச்சிக்கு நானே முக்கிய, முதல் காரணமானவன் என்பதோடு இந்தியைப் புகுத்தியவர் திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்களேயாகும்.

பிறகு சுதந்தரம் கிடைத்தபின்னரும் ராஜகோபாலச்சாரியாரும், மற்றும் பல ....ரும் சேர்ந்தே அரசியல் சட்டத்தில் இந்தி மாத்திரமே இந்தியாவின் அரசியல் மொழியாக இருக்கவேண்டியது, இருக்கத் தகுந்தது என்பதாகப் புகுத்திக்கொண்டார்கள் !

* *

ஆச்சாரியாரின் இந்தி கட்டாயத் திணிப்பும், எனது போராட்டமும்

மற்றும் அதற்கு முன்பாகவே ஆச்சாரியார் 1938ல் இந்தியைக் கட்டாயப் படிப்பாக கொண்டுவந்தபோதே நான் திராவிட நாடு (தமிழ் நாடு) தனி சுதந்தர நாடாகப் பிரிந்துவிட வேண்டும் என்றும் பேராடினேன்.

இந்த என்னுடைய போராட்டம் காரணமாகவே தான் அரசியல் சட்டம் பச்சை மனுதர்ம ஆட்சித்திட்டமாக ஆக்கப்பட்டது என்று சொல்லலாம்.

பிறகும் இந்தி விஷயத்தில் என்னுடைய போராட்டம் அதாவது "சுதந்தர நாளில் அரசாங்கக் கொடி எரிக்கப்பட வேண்டியது" என்ற கிளர்ச்சி துவங்கிய தருலேயே "இந்தி பேசாத நாட்டில்" மக்களிடத்தில் இந்தியை எந்த உருவத்திலும் கட்டாயப் படுத்துவதில்லை" என்பதாக ராஷ்டிரபதி, தலைமை மந்திரியும் காங்கிரசுத் தலைவருமான பண்டித நேரு, சென்னை முதல் மந்திரியான காமராஜர் ஆகிய மூவரும் சேர்ந்து உறுதிமொழி சாசனம் கொடுத்தது ஆகும்.

அலட்சியத்தின் விளைவு

இப்படிக் கொடுத்தபின்பும் இந்திய அரசாங்கம் இந்தி விஷயத்தில் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நடந்துக் கொள்ளாமல், அரசாங்கத்திடம் தமிழ் நாட்டு மக்கள் நம்பிக்கை கொள்ளுவதற்கு இடமில்லாமலேயே நடந்து கொண்டு வந்திருக்கிறது.

அதன் விளைவுதான், அந்த நம்பிக்கைக்கு இடமில்லாமல் நடந்துகொண்டதை ஒரு சாக்காகக் கொண்டு

தான் இன்று தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்பு என்னும் பேரால் நடந்த 'கிளர்ச்சி'களும், காலித்தனங்களும், நாசவேலைகளும், கொள்ளைகளும், கொலைபாதகத் தன்மைகளுமாகும் என்பது எனது உறுதியான கருத்து.

இதில் குறிப்பிடத் தகுந்த விஷயம் என்ன வென்றால் இக் கிளர்ச்சி முதலியவை நீடிக்கவும், மேற்சொன்ன, கேடுகள் வளர்ச்சிபெறவும் காரணமானவைகளில் முக்கியமானது தமிழ் நாடு அரசாங்கமும், அவர்களால் நடத்தப்பட்ட போலீஸ் நடத்தைகளும் தான் என்று சொல்வதற்கு என்னை மன்னிக்க வேண்டும்.

போலீசு தங்களை புலமற்ற ஸ்தாபனம் என்பதாகவே கிளர்ச்சிக்காரர்களிடமும் காட்டிக் கொண்டது.

கிளர்ச்சியை உடனுக்குடன் அடக்கவேண்டியதில்லை ; தானுகவே அடங்கிவிடும் என்றே அரசாங்கம் சமயம் பார்த்துக் கொண்டே இருந்துவிட்டது.

இந்தக் காரணங்கள் கிளர்ச்சிக்காரர்களுக்கும் காலிகளுக்கும் வசதியாக ஏற்பட்டு விட்டது.

இருமொழி ஆட்சிக்கு சட்டம் செய்ய முயற்சி

இப்போது கிளர்ச்சி "அடங்கிய"பின் இந்தி திணிப்பை தமிழ் நாட்டில் இந்திபேசாத மக்கள் இடையில், அவர்கள் விரும்பும்வரை அமுல் படுத்துவதில்லை என்பதாக ஒரு சட்டம் செய்ய முயற்சிப்பதாக தமிழ் நாடு அரசாங்கம் முன்வந்திருக்கிறது. அதிலும் "பத்துக்கு அடிபோட்டால் அய்ந்தாவது கிடைக்காதா!" என்கின்ற பழமொழிப்படி, "இங்கிலீஷும் இந்தியும்

இரண்டுமே நிரந்தரமான அரசியல் மொழியாக இருக்க வேண்டும்,'' என்று சட்டம் செய்யவேண்டும் என்று சொல்லிக்கொண்டு புறப்படுகிறது,

இதே சமயத்தில் தமிழ் நாட்டுக்காரரான மத்திய அரசாங்க மந்திரிகள் இருவர் இந்திபேசாத ராஜ்ய மக்கள் விரும்புகிறவரை அந்த நாடுகளின் அரசியல் மொழி ஆங்கில'மாகவே இருக்கவேண்டும் என்கின்ற வேண்டுகோள்மீது தங்கள் பதவியையே ராஜினமா கொடுக்க முன் வந்து இராஜினமா செய்தார்கள்.

கிளர்ச்சிக் கர்த்தாவின் கூற்று

கிளர்ச்சியைத் தூண்டிவிட்டு காலித் தனங்களை வளரச்செய்த பிரமுகர் ஆச்சாரியார், ''இவை ஒன்றும் எனக்குப் போதாது'; மொழி சம்பந்தமான அரசியல் சட்ட 17-வது பிரிவை அடியோடு எடுத்துவிடவேண்டும்,'' என்று அர்த்தமில்லாமல் கூறிக்கொண்டிருக்கிறர்.

தமிழ் நாட்டில் காங்கிரசுக்கு எதிர்க்கட்சி என்று சொல்லப்படுவதுதான் கண்ணீர்த்துளிகள் (தி.மு.க.) ''நேரு உறுதிமொழியைச் சட்டமாக்க வேண்டும்'' என்று கூறிவந்ததானது இன்று ஆச்சாரியாருக்கு பயந்து கொண்டு ஏதேதோ கூறிவருகின்றது.

ஆட்சியை ஒழிப்பதே அடிப்படை நோக்கம்

இவை எப்படியானாலும் இவைகளுக்கு ஏற்ப அரசாங்கம் என்ன சட்டம் செய்தாலும் கிளர்ச்சி என்பது நின்றுவிடும் என்று கருதுவதற்கில்லை. ஏனெனில் சில

கிளர்ச்சிக்காரர் (ஆச்சாரியாரும், கண்ணீர்த்துளிகளும்) "காங்கிரசு ஆட்சியை ஒழிக்கவே தங்கள் முயற்சி", என்று பட்டாங்கமாய் சொல்லி வருவதால், எந்த சட்டம் செய்தாலும், சட்டம் செய்ய முடியாதபடியான காரணங்களைச் சொல்லிக்கொண்டு தொல்லை கொடுத்துக் கொண்டுதான் இருப்பார்கள்.

ஆதலால் இந்த இருவர்களையும் முக்கியமாய்க் கருதாமல் எதிரிகளின் விஷமப் பிரச்சாரத்தால் அரசாங்கத்தின் மீது பொதுமக்கள் இடையில் ஏற்பட்டிருக்கும் அவநம்பிக்கையையும் வெறுப்பையும்போக்கும் வண்ணம் "பண்டிதநேரு வாக்குறுதியைச் சட்டமாக்குவது" என்கின்ற காரியத்தை நிறைவேற்றுவது என்கின்ற கருத்துக்கு பல பிரமுகர்கள் முன்வந்து காரியம் செய்யப் போகிறார்கள்.

அவநம்பிக்கையை மாற்றமுடியுமா ?

ஆனால், இந்தக் காரியம் செய்வதே அரசாங்கத்திற்கு ஒரு இழுக்குத்தான் என்பது எனது கருத்து. ஏன் எனில் அரசாங்கத்தின்மீது நம்பிக்கை இல்லை என்கின்ற காரணத்தினாலேயே மக்கள் சட்டம் செய்ய விரும்புகிறார்கள் என்று ஏற்படுகிறது. அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லாமல் போனகாரணம் தவறானது அல்ல என்றே கூடச் சொல்லுவேன். ஏனெனில் மத்திய அரசாங்கம் அதற்கேற்ப இந்தி விஷயத்தில் நடந்து வந்திருக்கிறது. ஆதலால் மக்களைத் திருப்திப்படுத்த இப்படி ஒருசட்டம் செய்யவேண்டியது அவசியம் ஆகிவிட்டது.

இந்தப்படி செய்யவேண்டும் என்று கூறுகிற, கோருகிறமக்கள் யாராயிருந்தாலும் அவர்கள் தங்கள்

யூனியன் ஆட்சிக்கு அடிமைகளாய் (குடிகளாய்) இருக்கிறோம், என்ற "வாக்குறுதி கொடுத்துவிட்டே" கேட்கிறார்கள். இப்படிப் பட்டவர்களுக்கு அரசாங்கம் இதுவும் செய்யலாம், இன்னும் அதிகம் செய்யலாம்.

சட்டம் மட்டும் மாற்றமுடியாததா ?

அவை, ஒன்று இன்றைக்கு செய்யும் சட்டத்தைக் குறைந்த அளவு, காங்கிரசு ஆட்சி மாறி இன்றைய நிலை மாறி வேறு கைக்கு மாற நேர்ந்தால் அப்போது ஆட்சிக்கு வருகிறவர்கள் (சட்டத்தை) மாற்றமாட்டார்கள் என்பதற்கு என்ன உறுதி ?

ஏன் இப்படிச் சொல்கிறேனென்றால் ஆச்சாரியார் இந்தப்படி கோளாறான திட்டங்களைச் சொல்லுவதற்கு காரணம் என்ன ?

திட்டங்களின் மீதுள்ள காதலா ? அல்லது இப்படிச் சொல்வதன் மூலம் இந்த ஆட்சியை ஒழித்து தாங்கள் கைப்பற்றலாம் என்ற ஆசையா ? என்பதை யோசிக்க வேண்டும்.

ஆச்சாரியாரின் பழைய கூற்றுகளை மறக்க முடியுமா ?

ஆச்சாரியார் 1938-ல் இந்தி கொண்டுவந்த காரணம் "இந்தி படித்தால் சமஸ்கிருதம் படிக்கவேண்டியதில்லை. ஆதலால் எல்லாக் குழந்தைகளும் இந்தி படிக்கவேண்டும்" என்றார். அதை இப்போது மறந்து விட்டார் ; அல்லது கைவிட்டு விட்டார் என்று கருதலாமோ ?

மற்றும் தான் மத்திய ஆட்சி மந்திரியாக இருந்த போது இந்தி படித்தால்தான் உத்தியோகம் என்ருர். அதை இப்போது மறந்துவிட்டாரா ? கைவிட்டு விட்டாரா ?

பொதுவாகச் சொல்கிருர் ; "இப்போது அந்தக் கருத்தை மாற்றிக்கொண்டேன்," என்கிருர்.

இந்த மாற்றம் எதுவரையில் இருக்கும் ? தன் கைக்கு ஆட்சி வரும்வரைக்கும் இருக்கும் ; வந்தால் அப்புறம் ?

ஆகையால் இந்தச் சட்டம் நமக்கு உறுதியான தாகாது.

மற்றும் ஆச்சாரியார் இந்திப் பிரச்னை தன் சொந்தப் பிரச்னை என்றும் தன் கட்சிக்கும், இந்திப்பிரச்னைக் கும் சம்பந்தமில்லை என்றும், அது தனக்கே சொந்த மானது என்றும் கூறுகிருர்.

அப்படியானுல் இவர் யாருக்குப் பிரதிநிதி ? ....னருக்கு மாத்திரம் பிரதிநிதி ; இவருக்கு ஆதரவு இவர் பயன்படுத்திக்கொள்ளுவது ....னப் பத்திரி கைகள் மாத்திரம் என்ருல் இதில் எவ்வளவு மோசம் இருக்கிறது !

மற்றும் இவரது இந்திப் பிரச்னையின் முக்கிய லட் சியம் சோஷ்யலிச ஆட்சியை (காங்கிரசு ஆட்சியை ஒழிப்பதுதான் என்ருல் இதை நம்புகிற லட்சியம் சொ கிற; இவரை ஆதரிக்கிற மக்கள் எவ்வளவு முட்டாள் பொறுப்பற்றவர்களாக, சோஷலிச துரோக கீழ் மக் ளாக இருக்க வேண்டும் ?

ஆகையால் இதை விட்டுவிட்டு இரண்டாவது விஷயத்தைக் கவனிப்போம் ;

என்னவென்ருல் நேரு வாக்குறுதி அதாவது,

இந்தி பேசாத மக்கள் விரும்புகிறவரையில் ஆங்கிலம் நீடித்திருப்பது என்பது வாக்குறுதிக்கும், சட்டத்திற்கும் என்ன அப்படி பிரமாதமான வித்தியாசம் இருக்க முடியும்?

ராஜிஞமா கொடுத்த திரு. சுப்ரமணியம் சொல்கிருர், பிரதமர்சாஸ்திரியார் பேச்சில் தனக்கு நம்பிக்கை இருப்பதாகவும் அந்த இடத்திற்கு வேறு ஒருவர் வந்தால் அவர் நேருவின் உறுதிமொழியைக் காப்பாற்றுவார் என்பதற்கு என்ன உறுதி என்று கேட்கிருர் ? இது அவ்வளவு புத்திச்சாலித்தனமான கேள்வி என்று எனக்குத் தோன்றவில்லை.

அடுத்து வருபவர் மாற்றிவிட்டால் என் செய்வது ?

ஏன் எனில் இதே கேள்வி சட்டம் ஆன பின்பும் நேரு உறுதிமொழிக்கு விரோதமானவர், உறுதிமொழியைக் காப்பாற்ற வேண்டியதை அவசியமில்லை என்றும் கருதுகிற ஒருவர் பிரதமராக வர நேரிட்டால் அவருக்கு இந்த சட்டத்தை மாற்றுவது எந்த விதத்தில் முடியாததாக ஆகிவிடும்? அதற்கேற்ற பலமுடையவர் தானே பிரதமராக வரமுடியும்? பார்லிமெண்ட் அவருக்கு ஆதரவு கொடுக்கத் தக்கது ஆகத்தானே இருக்க முடியும்? இந்தி பேசும் மக்கள் தானே, இந்தி வெறியர்கள் தானே பார்லிமெண்டில் மெஜாரிட்டியாய் இருக்க முடியும்? அப்படி என்ன அந்த சட்டம் 17 வது பிரிவு

போன்ற அவ்வளவு பல முடையதாக இருக்கமுடியும்? இதை எப்படியோ சமாளிக்கலாம் என்றாலும், "இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரையில்" என்ற சொல்லுக்கு விளக்கம் என்ன?

ராஜாஜி—..............னர், பத்திரிகைக்காரர்கள், கண்ணீர்த்துளி (தி. மு. க.) கள், காங்கிரஸ் எதிரிகள், காமராஜ் எதிரிகள், சோஷ்யலிச எதிரிகள் முதலியவர்கள் எல்லாம் இன்று "இந்தி பேசாத" மக்கள் தான். இவர்கள் விரும்புகிறவரை என்றால் இவர்களுக்கு இந்தியைவிட காமராஜரை, சோஷ்யலிச காங்கிரசை இன்றைய ஆட்சியை ஒழிப்பது தானே முக்கியம்?

சோஷ்யலிசஆட்சி முக்கியமா? இந்தி முக்கியமா?

இந்தி ஒழியவேண்டுமா? காங்கிரஸ் சோஷ்யலிசம் காமராஜர் ஒழிய வேண்டுமா? என்றால் இவர்கள் எது ஒழிய வேண்டும் என்று சொல்வார்கள்?

இப்படிப்பட்ட நெருக்கடியில் இந்தி பேசாத மக்கள் யார் என்று கருதுவது? எதைக்கொண்டு நிர்ணயிப்பது? எப்படிக் கண்டு பிடிப்பது?

சட்டம் செய்த 3ம் நாள் இந்த (எதிரிகள்) கூட்டம் "நாங்கள் இந்திபடித்துவிட்டோம்; தயாராகிவிட்டோம் இந்திய அரசாங்க நிர்வாகம் சுலபமாக நடக்க எல்லா நாடுகளுக்கும், எல்லா மக்களுக்கும் ஒரே மொழியாக அது இந்தியாக இருக்கட்டும்" என்று "இந்தி பேசாத மக்கள்" நாங்கள் தான் என்று இவர்கள் சொல்லி இந்தியை அழைத்தார்களேயானால் தடுப்பவர்கள் யார்?

இப்போது போலவே காங்கிரசிலுள்ள சில சோஷ்ய லிச துரோகிகளும், விரோதிகளும், காமராஜர் விரோதிகளும் இந்தக் கூற்றை மறுக்க மாட்டார்களே! வேடிக்கைப் பார்ப்பார்களே !

.........னரும் பத்திரிகைக்காரர்களும் கட்டுப்பாடாகப் பிரசாரம் செய்து உலகை ஏமாற்றிவிடுவார்களே!

இந்திபேசாத மக்களின் பிரதிநிதி யார் ?

இப்படிப்பட்ட நிலை வெற்றிபெறுமல் இருக்க இந்தி பேசாத மக்களைக் கண்டுபிடிக்க பரிகராம் என்ன இருக்கிறது ?

சட்டசபைப் பொதுத் தேர்தல் மூலம, மெஜாரிட்டி—மைனூரிட்டி மூலம் ஏற்படும் முடிவு ஒப்புக்கொள்ளத் தக்க தாகிவிடுமா ? அல்லது சட்டசபைத் தேர்தலிலும் மெஜாரிட்டி—மைனூரிட்டியிலும் உண்மை நிலையைக் கண்டுபிடித்துவிட முடியுமா ?

சட்டசபைப் பொதுத் தேர்தலில் இந்த பிரச்னையை முக்கியப்படுத்தி ஓட்டு வாங்க முடியுமா ?

சட்டசபைத் தேர்தலில் பல பிரச்னைகளில் இந்தி, ஒரு பிரச்னை தானே ?

சட்டசபைக்கு பணம், ஜாதி, நாணயக் கேடான பிரசாரம், ஆள்மாறாட்டம், அதிகாரிகள் அயோக்கியத் தனம் முதலியவை ஊடுருவ நிறைய வசதியும், அனுபவமும் இருக்கிறபோது உண்மையான கருத்து அறிய வாய்ப்பு எங்கே இருக்கிறது ?

சட்டசபைப் பொதுத்தேர்தல் மூலம் நாம் எப்படி "இந்திப்பேசாத மக்கள் விருப்பத்தை"க் கண்டுபிடிக்க முடியும் ?

எனவே இந்திப் பேசாதமக்கள் விருப்பத்தை உண்மையாகக் கண்டுபிடிக்க வேண்டுமானால் **இந்திப் பிரச்னை மீதே தனிப்பட்ட வாக்கெடுப்பு (Referendum)** அந்தந்த ராஜ்யத்தில் தனித்தனியே நடத்தவேண்டும்.

நேர்மையான வாக்கெடுப்பு வேண்டும்

வாக்கெடுப்பு நடுவர்களான இந்திய மக்களுக்குள் உள்ள இன உணர்ச்சி இனச் சலுகை உணர்ச்சி இல்லாத மக்களாகப் பார்த்து நியமிக்க வேண்டும்.

இந்தப் பிரச்னையில் கோர்ட்டுகளுக்கு அதிகாரம் இல்லாமல் செய்யவேண்டும்.

வக்கீல்கள் வைத்து புகார்கூற முடியாமல் செய்ய வேண்டும்.

வாக்கெடுப்பில், வாக்கெடுப்பு முடியும்வரை சினிமாப்படம் எடுப்பது போல் கேமராக்கள் வைத்து படம் எடுக்கவேண்டும். ஏனென்றால் இப்படிச் செய்வதால் விஷமத்தனங்கள் நடைபெறாது என்பதோடு விஷமிகளும் முன்வரமாட்டார்கள்.

இப்படியும், இதுபோன்ற இன்னும் தேவையான சில வசதிகளை இன்றியமையாததாக்கி,

பொது ஜன வாக்கெடுப்பின் மூலம் இந்தி பேசாத மக்களின்விருப்பத்தை அறிந்தால்தான் அது உண்மையான யோக்கியமான கருத்தை அறிந்ததாகும்.

அப்படிக்கில்லாமல் விளக்கமற்ற சொற்களை, கருத்துக்களைக்கொண்டு சட்டம் இயற்றுவது சமூகத் துரோகிகளுக்குத்தான் பயன்படும் என்பது மாத்திரம் அல்லாமல், மேலும் பல சிக்கல்களையும், நெருக்கடிகளையும் உண்டாக்கிவிடவும் கூடும்.

சோஷ்யலிச ஆட்சியை ஒழிக்க இடம்தரலாகாது

ஏனெனில் இன்றைய கிளர்ச்சி சோஷ்யலிச ஆட்சியை ஒழிக்க ஏற்பாடு செய்யப்பட்ட கிளர்ச்சி ; காலிகளாலும், பார்ப்பனர்களாலும், பத்திரிகையாளர்களாலும் தூண்டிவிடப்பட்டு நடத்தப்பட்ட கிளர்ச்சி ஆதலால், இதைத் தமிழ் நாட்டு சர்க்காரும் ஒப்புக் கொண்டிருப்பதால், மேலும் இந்தி பேரால் கிளர்ச்சி ஏற்படாமலிருப்பதற்கு ஆக இதை நான் நடுநிலைமையில் இருந்து கிடைத்த அறிந்த ஆதாரங்களைக் கொண்டு, இந்தக் கருத்தை, சட்டம் செய்யப் போகிறவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

5

பொது மக்களுக்கு

(19—2—65 தேதிய "விடுதலை")

இன்றைய தமிழ் நாட்டில் மாத்திரம் ....ன ஆதிக்கம் ஓரளவுக்கு மறைந்து, ஆட்சியிலும் ....னர் அல்லாதார் ஆட்சி பெருகியும் இருப்பதன் பயனாய்—

மூன்று முக்கியமான விஷயங்களில் பொதுமக்களுக்குத் தெளிவு ஏற்பட்டு வருகின்றது.

1. நீதிபதிகள் நேர்மையானவர்கள் அல்ல.

2. வக்கீல்கள் யோக்கியமானவர்கள் அல்ல.

3. வியாபாரிகள்; முதலாளிகள் நாணயமானவர்கள் அல்ல

என்பதான காரியம் மக்களுக்கு விளங்கிவிட்டது.

இவர்கள் மூவரும் இப்படிப்பட்டவர்களாகவே பெரிதும் இருப்பதாலும், ...ன ஆதிக்கமும் ....ன ஆட்சியும் தங்கள் நலனுக்காக, இவர்களின் இப்படிப்பட்ட குணங்களை மறைத்து, பெருமைப் படுத்தி வந்தார்கள்.

இம் மூன்று கூட்டமும் நாட்டுக்குத் தேவை இல்லாதவை; தங்களுக்காகவும் ....னர்களுக்காகவுமே பயன்படத்தக்கவை என்பதோடு மக்களின் ஒழுக்கத்தையும் பாதுகாப்பையும் செல்வத்தையும் கேடாக்கத் தக்கவையுமாகும்.

பொதுநலவாதிகள் கடமை

இப்போது நாட்டில் ....ணர்களுக்கு எப்படி மரியாதை குறையும்படியான உணர்ச்சிகள் வளர்க்கப் படுகின்றனவோ அதுபோலவே இனி இம்மூவர்களு டைய மதிப்பும் மரியாதையும் குறையும்படியான உணர்ச்சியை வளர்க்க பொதுநலவாதிகள், ஒழுக்க வாதிகள் பாடுபட வேண்டும்.

இதன் அவசியத்துக்கு எடுத்துக்காட்டுகள் ஏராள மாய்க் கூறலாம்.

சுருக்கமாய் கூறுவதானுல் நீதிபதிகளைப்பற்றி நம் தமிழ்நாட்டில் உயர்மன்ற நீதிபதிகளில் பெரும் பாலோர் நடந்துகொண்ட முறையும்; பிரதம நீதிபதி நடந்துகொண்ட முறையுமே போதுமானதாகும். ஏன் இதைச் சொல்லுகின்றேன் என்ருல் இவர்கள் நடந்து கொண்ட நேர்மையற்ற விஷயங்களுக்குப் பரிகாரமே ஏற்படவில்லை என்பதால்தான்,

வக்கீல்களின் இழிதன்மை

மற்றும் வக்கீல்கள் தன்மைக்கு எடுத்துக்காட்டு ஓர் **அழகிரிசாமி** என்கின்ற ....னரல்லாதவருக்கு அளிக்கப்பட்ட ஒரு பதவியை (கவர்மெண்ட் பிளீடர்) தடுப்பதற்கு ஏற்பட்ட விவகாரத்தில் 200 வக்கீல்கள் தனித்தனி வக்காலத்துப் போட்டார்களாம்.

மற்றும் நம் நாட்டில் அண்மையில் நடந்த நாச வேலை காலித்தனம் சம்பந்தமாய் கைது செய்யப்பட்ட

ஒரு மாணவனுக்கு (நாசவேலை நடந்து கொண்டிருக்கும்போதே) திருச்சியில் ஜாமீன் மனு போடுவதற்கு "40" வக்கீல்கள் (மிமோ) வக்காலத்து போட்டார்களாம். இந்நடத்தை தொழில் ஒழுக்கத்தைச் சேர்ந்ததாகுமா?

வியாபாரிகளின் யோக்யதை

வியாபாரிகளைப்பற்றிச் சொல்ல வேண்டுமானால் அவர்கள் மக்களை "ஏமாற்றுவது" என்பது ஒருபுறம் இருந்தாலும் இந்த ஒரு ஆண்டில் சுமார் "ஒரு ஆயிரம்" பேர்கள் வீட்டையும், கடையையும் சோதனை செய்து இவற்றுள் 100-க்கு 90 இடங்களில் நாணயக் கேடும்; மோசடிகளும் பலவற்றுள் தப்புக் கணக்கும் ஒழுக்கக் கேடான பணமும் கண்டுபிடித்து இருப்பதுடன் இந்த யோக்கியர்களிலேயே சிலர் (திமிங்கிலங்கள்) இப்போது நடந்த கொலைகார கொள்ளை நாசவேலைகளுக்கு பணமும், ஆளும் வழங்கி இருப்பதாக சர்க்கார் வேவுகாரர்களால் ஆதாரங்களுடன் சேதி கிடைத்து இருக்கின்றதாம். ஆகவே இக்கூட்டத்தார்கள் மதிக்கத் தகாதவர்களாக ஆக்கப்பட வேண்டியவர்கள் என்பதற்கு வேறு என்ன வேண்டும்?

நாசவேலைக்கு உதவுவதா?

பொதுவாகவே இவர்களில் பின் இருவர் (வக்கீல்கள், வியாபாரிகள்) தொழில்களுக்கு "யோக்கியமும் நாணயமும்' வேண்டியதில்லை என்பது தொழில் முறையாகவும் இருக்கின்றது என்றாலும்,

வக்கீல்களின் யோக்கியத்தையும், மனப்பான்மையும் தெரிய வேண்டுமானால் "அரசாங்கத்தை ஒழிக்க

வேண்டும்' என்று செய்யப்படும் கிளர்ச்சிக்கு "நாச வேலையில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு 'ஃபீசு இல்லாமல் வாதாடத் தயாராயிருக்கிறோம்" என்று வக்கீல் குழாங்கள் தீர்மானம் தெரிவிப்பார்களானால் இவர்கள் யோக்கியதை எப்படிப்பட்டது என்று விளங்க வில்லையா?

ஆகையால் சுவரொட்டி விளம்பரங்கள் மூலம் இவர்கள் மதிப்பை, மரியாதையை ஒழித்து மக்களை ஜாக்கிரதைப்படுத்த வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன்.

ஏனெனில் இம்மூன்று குழுவினர்களது நேர்மை யற்ற, ஒழுக்கமற்ற, நாணயமற்ற, தன்மைகள் என் பவை, சமதர்மத் தன்மையை உண்டாக்கும் ஆட்சியை ஒழிப்பதற்கு ஆகவும், ஏற்படுவதற்குத் தடையாகவும் இருப்பதாக உணர்வதாலேயே சமதர்ம வாதியாகிய நான் 100-க்கு 90 மக்கள் நலம் கருதி இப்படிக் கூறு கின்றேன்.

நல்ல நீதிபதிகள், நல்ல வக்கீல்கள், நல்ல வியா பாரிகள் இல்லை என்று நான் சொல்லவில்லை. அவர்கள் சிறிய எண்ணிக்கை கொண்டவர்கள்.

6

சர்க்காருக்கு நல்ல படிப்பினை

(2—3—65 தேதிய "விடுதலை")

சமுதாயத்தில் ஜாதிப்பிரிவுகளை ஒழிக்க வேண்டியதும், பொருளாதாரத்தில் திமிங்கிலங்களை ஒழிக்க வேண்டியதும் எவ்வளவு அவசியமான காரியம் என்பதை, அண்மையில் நம் நாட்டில் நடந்த காலித் தனத்தைக் கொண்டே அரசாங்கமும், மக்களும் நல்ல வண்ணம் உணர்ந்திருக்கலாம். இதனாலேயே ஓர் படிப் பினை கொள்ளலாம்.

கலவரங்களுக்குக் காரணமானவர் யார்?

இன்றைய காலித்தனத்திற்குக் காரணம், அறியாச் சிறுவர்களைப் பயன்படுத்திக் கொண்ட ....னர், பத்திரிகைக்காரர்கள், காலித்தனத்தில் வயிறு வளர்ப் பவர்களே ஆவார்கள். இவர்கள் தவிர பொதுமக்களில் யாராவது ஒருவருக்கு அரசாங்கத்திடமுள்ள அதிருப்தி காரணமே இந்தி "புகுத்தப்பட்ட" காரணம் பற்றிய அதிருப்தி என்று சொல்ல, எந்த ஒரு யோக்கியமானவர் பெயரையாவது காரணத்தோடு சுட்டிக் காட்ட முடியுமா? வேண்டுமானால் பணக்காரர்களில் எங்கோ இரண்டொருவர் இதற்குப் பொருளுதவி செய்து வரலாம். அதற்குக் காரணம் பணக்காரர்களுக்கு பணம் திருட்டு வழியில் திரட்ட அரசாங்க அதிகாரிகள் இடங் கொடுத்ததேயாகும்.

நமது நாட்டில் இந்தியின் நிலை.

இந்தி பாஷையானது பள்ளியில் படிக்கிற எந்தப் பையனுக்கும் அவன் படிப்புக்கு கேடு ஏற்படும்படியான தன்மையில் இல்லை;

இந்தி மொழியானது ஆங்கிலம் படித்த எந்த மனிதனுக்கும், எந்த உத்தியோகத்திற்கும் இது வரை தடையாய் இருந்ததில்லை; இருக்கவும் போகிறதில்லை.

"இந்தி தெரியாததால் எனக்கு வேலை கிடைக்கவில்லை" என்றோ, இந்தி தெரியாததால் எனக்குப் பிரமோஷன் இல்லை," என்றோ இதுவரை ஒரு மனிதனும் குறை சொல்லிக் கொண்டதாகத் தெரியவில்லை. (வேண்டுமானால், "நான்........னாய்ப் பிறக்காததால், மேல் ஜாதியாய்ப் பிறக்காததால் வேலைகிடைக்கவில்லை" என்று சொல்லக் கேட்கலாம்.)

மற்றபடி ஒரு குறை சொல்லலாம் அதாவது,

"அரசாங்கம் ரயில்வே உத்யோகஸ்தர்களுக்கு, மற்றும் சில உத்யோகங்களுக்கு இந்தி படிப்பித்துக் கொடுக்கிறார்கள்." என்று சொல்லலாம் அது போலீஸ் கான்ஸ்டபிளுக்கு டிரில், மற்றபடி டிரெயினிங் கொடுப்பது போல், அரசாங்கம் உத்யோகம் கொடுத்து உத்யோக நேரத்தில் இந்தி டிரெயினிங் கொடுக்கிறார்கள். அதனால் நமக்கு நட்டம் என்ன? அசவுகரியமென்ன? ஆஃபீசுகளில் வேலை செய்வதற்குப்பதில் அதே நேரத்தில் டிரெயினிங் பெறுகிறோம். வேறு பலர் இந்தி படித்துவிட்டு வந்து நல்லவண்ணம் இந்தி கற்றுக் கொண்டு வந்து உத்யோகத்தில் பிரவேசிக்கிறார்கள். அதன் பயனாய் அவர்கள் சில சலுகைகள் பெறுகிறார்கள்; சில சலுகைகள் சட்டப்படி சர்வீஸ்படி என்று இல்லாமல்

மேலதிகாரியின் இஷ்டப்படி என்று இருக்கிறது. இதற்கு நாம் எந்த உரிமை கொண்டு போராட முடியும்?

இந்த நிலையில் இந்தி தெரிந்தாலும், தெரியாவிட்டாலும் பலன் ஒன்றுதான்.

ஆட்சியில் சுயநலக்காரர்கள் !

ஆட்சியில் இன்று ....பான் மாத்திரம் நமக்கு எதிரி என்று கருதிவிட முடியாது. ....னைத் திருப்திப்படுத்தி பயன் பெறலாம் என்கின்ற ....னரல்லாத பலர் 100க்கு 90 பேர் மேல் உத்யோகத்தில் உண்டு. இவர்கள் டெல்லி ஆட்சியிலும் இருக்கிறார்கள் நம் நாட்டு ஆட்சியிலும் இருக்கிறார்கள். இந்த சுயநல காரர்களை நாம் எப்படி ஒழிக்க முடியும்? (நமக்கு வகுப்பு உரிமை வரும்வரை ஒழிக்கமுடியாது; இந்த கஷ்டத்தை அனுபவித்துதான் தீரவேண்டும்.)

இதுவும் தவிர டெல்லி ஆட்சியில் உள்ள மந்திரிகள் ....னரும், ...னரல்லாதாரும் ஒரே குண முடையவர்கள் ஆவார்கள். அரசாங்க மேல் அதிகாரிகளிலும் அப்படியே இருக்கிறார்கள்.

இந்தி எதிர்ப்புப் போரா இது ?

இங்கு நடக்கும் "இந்தி" எதிர்ப்புப் போராட்டம் நிழலை வெட்டுவது போல் ஆகுமே ஒழிய "ஆளை வெட்ட முடியவேமுடியாத" போராட்டமாகும்.

"இந்தி ஆட்சி மொழி" என்பதை இரகசியமாகவோ, யாருடைய எதிர்ப்பை அலட்சியம் செய்தோ சட்டம் செய்துவிடவில்லை. இந்த ராஜாஜியும், முன்ஷி

யும், டி. டி. கிருஷ்ணமாச்சாரியும் இருந்து நமது பிரதி நிதிகள்பேரால் செய்தார்கள்.

இந்தி கட்டாயத்தை முதலில் எதிர்த்தது நான்தானே?

25 ஆண்டுகளுக்கு முன் நான்தான் இந்தியை எதிர்த்தேன். இந்தி கூடாது என்ற கருத்தையே நான் 1928லேயே "இந்தியின் இரகசியம்" என்று 'குடி அரசு' இதழில் எழுதினேன். இந்தியை நான்தான் தார் கொண்டு அழித்தேன். "இந்தியைக் கட்டாயப்படுத்து வதால் அரசியல் கொடியைக் கொளுத்துகிறேன்" என்று நான்தான் அறிக்கை விட்டேன். "அரசியல் சட்டத்தைக் கொளுத்துவேன்" என்று கூறி நான்தான் கொளுத்தினேன்.

இவ்வளவையும் என் கழகத் தோழர்களும் செய்ய நான் தலைவனாக இருந்து நடத்தினேன்.

காமராஜர் பதவிக்கு வந்தபின் காமராஜரையும், காங்கிரசையும் ஆதரித்துக்கொண்டே இருக்கும்போது தான் கொடியைக் கொளுத்த நாள் குறித்தேன். சட் டத்தைக் கொளுத்தினேன்.

அக்காலங்களில் எனக்கு யார், வேறு எந்த கட்சி யினர் உதவி செய்தார்கள் ?

ஆச்சாரியார் கடுந்தண்டனைகள் விதிக்கவில்லையா ?

இதே ஆச்சாரியார்தான் 1939-ல் கட்டாய இந் தியை எதிர்த்ததற்காக என்னை 3 ஆண்டு சிறைவாசம் 2000 ரூபாய் அபராதமாக தண்டித்தார்.

திராவிடர் கழகத்தாரை, இதே பக்தவத்சலனார் அரசியல் சட்டத்தைக் கொளுத்தியதற்கு 4000 பேரை

3 ஆண்டுவரை தண்டித்தார். என்னையும் ஒன்றரை ஆண்டு தண்டித்தார்.

ஆச்சாரியார் வேடமும் வெறியாட்டமும்

இப்படிப்பட்ட இந்த ஆச்சாரியார் இன்று இந்தி எதிர்ப்பு என்று வேஷம் போட்டுக்கொண்டு வெறியாட்டம் ஆடுகிறார்! அதே பக்தவத்சலனார் அவர்கள் காலிகளுடன் "கிச்சு கிச்சுத் தம்பல" விளையாட்டு விளையாடி காலிகளுக்கு சரித்திரத்தில் இடம்பெறத் தகுந்த அளவு பெருமையைக் கொடுக்கும்படியாக பெருமையும் விளம்பரமும் கொடுத்து இருக்கிறார்.

இந்த அறிஞர் அண்ணாத்துரை "இந்தியும் வேண்டும், ஆங்கிலமும் வேண்டும்" என்று சட்டசபையில் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இந்த நாவலர் நெடுஞ்செழியன் "இந்தி வேண்டும், ஆங்கிலம் வேண்டும்," என்று ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுக்கிறார்.

வெறும் விளம்பர வேட்டையே

இன்று சந்து கிடைத்தது என்று உள்ளே புகுந்து கொண்டு விளம்பர வேட்டை, அதாவது "கிளர்ச்சிக்கு காரணம் அண்ணாத்துரையல்ல, நான்தான்" என்று மார்தட்டும் முத்தமிழ்க் காவலர் இந்தியும், ஆங்கிலமும் சேர்ந்து இருக்கவேண்டும் என்ற தீர்மானத்தை 4—6—63ல் குன்றக்குடியில் நடைபெற்ற தமிழ்ப் பாது காப்புக்குழு மாநாட்டில் பிரரேபித்து சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்.

இந்த மோசக்காரர்களைத் தலைவர்களாகக் கொண்டு, ஆலோசனையாளராகக் கொண்டு நடத்து

வோர்களைக்கொண்டு கிளர்ச்சி என்னும்பேரால் பல கோடிக்கணக்கான ரூபாய் பெறுமான சொத்துக்கள், வீடுகள், ஆதாரங்கள், ரயில்கள், பஸ்கள், கார்கள், ஜீப்புகள், மற்றும் மக்கள் உயிர்கள் சேதமடைந்தது என்றால், இந்த நாடு ஆட்சி இல்லாத, அனார்க்கிச தன்னரசுக் குண்டர்கள் ஆதிக்க நாடு என்றுதானே சொல்லப்படவேண்டும்? இதைத்தானே, இப்படி ஆகவேண்டும் என்றுதானே ராஜாஜி .....னருக்கும் .. ...ன பத்திரிகைகளுக்கும் கண்ணீர்த்துளிகளுக்கும் ஸ்ரீமுகம் விட்டார்.

அதாவது,

ஆட்சியைக் கவிழ்ப்பதே குறி !

"நாடு அனார்க்கிசம் ஆனாலும் பரவாயில்லை, எந்த அதர்மமான காரியம் செய்தாவது இந்த நாட்டு ஆட்சி ஒழியும்படியான அளவுக்கு காரியம் செய்ய வேண்டும்" என்று சொன்னார்.

அவர் கருத்துப்படி ஆட்சி ஒழியாவிட்டாலும் ஆட்சி காலிகள்வசம் திரும்பி, அனார்க்கிச ஆட்சி நாடாகிவிட்டது என்று மக்கள் நினைக்கத்தக்க அளவுக்கு ஏற்பட்டுவிட்டதே! இதனால் கெட்டவர்கள் நம் மக்களின் பிள்ளைகள்தானே; "பாவம்" இந்த காலித்தனத்தில் 100க்கு 50 பேர்கூட மாணவர்கள் இருக்கமாட்டார்கள். 50 பங்குக்குமேல் கண்ணீர்த்துளி காலிகளும், பணக்காரரால் ஏவப்பட்ட காலிகளும் இருந்து நடத்தி இருக்கிறார்கள்! அவர்கள்தான் திட்டம் போடுகிறார்கள். அதை மாணவர் பேரால் பத்திரிகைக்காரர்கள் வெளியிடுகிறார்கள். காலிகளே நடத்துகிறார்கள்.

சோஷ்யலிசம் வர ராணுவ ஆட்சி தேவை

கிரமத்திற்குப் பார்ப்போமானுல் இன்றைய இந்த அனுர்க்கிச நிலைமைக்கு நமது முதல்மந்திரி, போலீஸ் மந்திரி, அய். ஜி. ஆகிய 3 பேரும் இராஜிஞமா செய்ய வேண்டும். அல்லது இவர்களிடம் காங்கிரஸ் தலைமை இராஜிஞமா வாங்கிக்கொண்டு ராணுவத்திடம் ஒப்பு விக்கவேண்டும். வெள்ளையன் ஆட்சியாய் இருந்தால் இப்படித்தான் நடக்கும். நடந்த செய்கையை முன் னிட்டே நான் சொல்லவில்லை. இந்த மாதிரி ஆட்களை வைத்துக்கொண்டு எப்படி சோஷயலிச திட்டத்தை அமுல் நடத்தமுடியும் என்பதான எதிர்காலத்தை உத் தேசித்தே சொல்லுகிறேன்.

பொதுமக்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் நான் சொல்லுவது என்ன என்றால் உலகமே நாசமானால் கூட இந்தி அரசியல்மொழி என்பதை அரசியல் சட்டத் திலிருந்து எடுக்கமுடியாது. இந்தியும், ஆங்கிலமும் அரசியல் மொழி (இப்போதே அரசாங்கம் ஒப்புக்கொண் டிருக்கிறது) என்பதற்கு வேண்டுமானுல் தேவைப் படும் உறுதி பெறலாம். நாம் கேட்டதும் இவ்வளவு தான். அரசாங்கம் இப்போதே உறுதி இருக்கிறது என்றது. இல்லை என்று ஏற்பட்டால் அதைப் பார்லி மெண்ட் மூலமோ, வேறு வழியிலோ உறுதி செய்து கொள்ளலாம் என்கிறது. இதில் எங்கும் கருத்து வேறு பாடு இல்லை—[க. து—......னர்கள் தவிர.]

நம்மில் சிலர், " இந்தி வந்தால (எங்கே வந்தது ?) தமிழ் கெடும் " என்கிருர்கள். சிலர் " இங்கிலீஷ் வந் தால் தமிழ் கெடும் " என்கிருர்கள். சிலர் " தமிழே ஆட்சிமொழி ஆகவேண்டும் " என்கிருர்கள். சிலர்,

" இரண்டும் இருக்கலாம் " என்கிறார்கள். இப்படி "பல துளிகோத்திரம்" போல் ஆளுக்கு ஒருவிதமாக கிளர்ச்சிக்காரர்களிலேயே பலர் பேசுவதானால் இன்றைய நாட்டுக்கே தேவையில்லாத (தமிழின் பேராலேயே வயிறு வளர்க்கின்ற) கர்நாடகப் பிண்டங்களும் கூப்பாடு போடுவது என்றால் இது என்ன ஊரா ; பாழா ? என்றுதானே கேட்கவேண்டியிருக்கிறது ?

மக்களிடம் உண்மை விளக்கப் பிரசாரம் தேவை

ஏழைப் பாமர மக்களான பொதுமக்களிடையில் ஜாதி ஆணவக்காரர்மீதிலும், பணக்காரத் திமிங்கிலங்கள் மீதிலும் இவர்கள் நடத்தைகளைக் கண்டிக்கும் வகையில் நல்ல பிரசாரம் செய்யவேண்டும். இதற்கு ஒரு பயிற்சிப்பள்ளி வைத்து, சமதர்மத்தின் நலன்களையும், ...ன பணக்காரர்களால் ஏற்படும் கேடுகளையும் நல்லவண்ணம் பிரசாரம் செய்யும்படி பயிற்சி அளிக்கவேண்டும். இந்தப் பிரசாரத்தில் நாம் பலர் சிறைசெல்ல நேரிடும். அரசாங்கம் நம்மை விட்டுவைக்காது. ஆனாலும் நம்முடைய இந்த தியாகம்தான் உண்மையான தியாகம் ஆகும். இந்த தொண்டுதான் நாட்டுக்கும் மக்களுக்கும் செய்யும் உண்மையான அவசியமான தொண்டாகும்.

ஆட்சிக்கு நல்ல படிப்பினையே

மற்றும் உண்மையாகவே சோஷ்யலிசக் கொள்கையை அமுலாக்க நினைக்கும் அரசாங்கத்திற்கு இந்த " கிளர்ச்சிகள் " (காலித்தனம்) ஒரு நல்ல படிப்பினை ஆகும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மற்றும் இந்த காலித்தனத்தால் இதன் கர்த்தாக்களுக்கு பெரிய ஏமாற்றம் ஏற்படவும் இது ஒரு சாதனமாகும்.

பிரசாரத்திற்கு அரசாங்கம் ஒருசமயம் முன்வர முடியாவிட்டாலும் காங்கிரஸ் தலைவர்களும், மற்ற காங்கிரஸ் தோழர்களும் முன்வந்து ஒரு ஏற்பாடு செய்வார்களானால் ஒரு ஆண்டில் மக்களையும், மாணவர்களையும் உண்மை உணரும்படி செய்துவிடலாம்.

ஆதலால் காங்கிரஸ்காரர்கள் அரசாங்கத்தை எதிர்பார்க்காமல் இதற்கு முயற்சிக்க வேண்டுகிறேன்.

குறிப்பு :

மந்திரிமாரையும் போலீசையும் குறைகூறி இருப்பதுபற்றி அவர்களுக்கு என்மீது கோபம் வரலாம். ஆனால் ராணுவம் வந்த பின்தான் காலிகள் அடக்கப்பட்டார்கள் என்றால் இது அரசாங்கத்திற்கு, போலீசுக்கு வெட்கக்கேடல்லவா ?

மற்றும் 100க்கு 3 விதமுள்ள .....னர்களால் இந்த நாட்டில் இவ்வளவு "பெரிய" அதாவது இராணுவம் வந்து அடக்கப்படவேண்டிய காலித்தனம் நடந்தது என்றால், அதிலும் ஒரு .....னைக்கூட தண்டிக்கமுடியாதபடி நடந்தது என்றால், இது பாக்கி 97 விகிதமுள்ள .....னரல்லாத மக்களுக்கு பெரிய மானக்கேடல்லவா ? என்பதைக் கவனித்தால் இந்த மூன்று பேர்மீது பொறுப்பைப் போடுவது தவறாகாது என்று கருதித்தான் இந்தப்படி சொல்லுகிறேன். ஏப்ரல், மே—வாக்கில் ஒரு மாநாடு கூட்டலாம் என்று இருக்கிறேன்

7

என்னைப்பற்றி

(3—3—65 தேதிய "விடுதலை")

நான் பிப்ரவரி 10-ந் தேதி "உஷார்!" என்ற தலைப்பில் எனது இயக்க மக்களுக்கு ஒரு தற்காப்பு அறிக்கை விட்டது பற்றி (திருவிளையாடல் புராணத்தில் பிட்டுக்கு மண் சுமந்த கதையில் "சிவபெருமானுக்கு" ஓர் பிரம்படி விழுந்தவுடன் அந்த அடி "உலகத்தில் உள்ள எல்லா மக்களுக்கும் விழுந்தது, வலித்தது தடிப்புக் கண்டுவிட்டது" என்ற கற்பனை மாதிரி) தமிழ் நாட்டில் உள்ள எல்லா ....னரும் துள்ளிக் குதித்து அரசாங்கத்தினிடம் சென்று முறையிட்டு என்மீது நடவடிக்கை எடுக்கும்படி தூண்டி இருப்பதோடு, எனக்கும் சுமார் 20 கடிதம்வரை கண்டபடி திட்டி மிரட்டி ஆபாசமாய் எழுதியிருக்கிறார்கள். இதற்காக நான் அன்று எழுதிய அறிக்கையில் ஒரு எழுத்தின் கருத்தையும் மாற்றிக்கொள்ளப்போவதோ, மறுப்பதோ கோழை வியாக்கியானம் செய்யப் போவதோ இல்லை.

அதற்காக என் மீது நடவடிக்கை எடுத்தாலும் நான் அரசியல் யோக்கியமற்ற கோழைகள்போல் எதிர் வழக்காடப் போவதில்லை. மற்றும் சொல்லுவேன், அந்த அறிக்கை அப்படி ஒன்றும் வீரத்தனமான அறிக்கை அல்ல; அது ஒரு சப்பை அறிக்கை என்றே சொல்லுவேன். அதை திருப்பித் திருப்பி படிப்பவர்களுக்கு அந்த இரகசியம் விளங்கும். கிரமத்திற்கு

நான் அதைவிட பலமான வேகம் கொண்ட அறிக்கை விட்டிருக்கவேண்டும்!

அவசியமான தருணத்தில் அவசியமான அறிக்கை

ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்ருல் எந்தமாதிரி சந்தர்ப்பத்தில் அந்த அறிக்கை விட்டேன். அந்த சந்தர்ப்பத்தைக் கவனித்தால் அந்த அறிக்கையின் அவசியம் விளங்கும் என்பதோடு அது போதாது என்பதும் தெளிவாகும்.

ஏன் என்ருல் நான் அறிக்கை விட்ட சமயம் அரசாங்கப் பொது காரியாலயங்கள், ஆஃபீசுரிகார்டுகள், சாமான்கள், கட்டடங்களை நாசப்படுத்திக் கொண்டிருந்த சமயம்; பல பஸ்கள் கொளுத்தப்பட்ட சமயம்.

அந்த அறிக்கையில் என்னுடைய அனுமதியை எதிர்பாராதீர்கள்; உங்கள் இஷ்டப்படி நடவுங்கள் என்று எழுதியிருப்பேனேயாளுல் 11, 12, 13 தேதிகளில் நடந்த கொடுமையான கொலைகாரக் காலித்தனங்கள் பெரும் அளவுக்கு நடந்திருக்காது. என் அனுமதி வருவதற்குள் காலிகள் தங்களுக்குக் கிடைத்த கட்டளையை நிறைவேற்றிக் கொண்டார்கள். பிறகு இராணுவம் வந்தது. தூண்டிவிட்டவர்களும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள தங்கள் தூண்டுதலை வெளிப் பார்வைக்கு நிறுத்திக்கொண்டார்கள்.

அரசாங்கத்தினரும் மக்கள் கண்ணைத் துடைக்க அடக்குமுறை நாடகம் நடத்தினுர்கள்.

ஆட்சியின் பலவீனத்திஞல் எதிர்ப்பலனே

அரசாங்கம் இன்று எடுத்துக்கொள்ளும் காரியங்கள் ஒன்றுகூட பலிக்கப்போவதில்லை. எல்லாம் ''நான்

நோகாமல் அடிக்கிறேன் நீ ஓயாமல் அழு'' என்ற பழமொழிப்படியேதான் பெரிதும் முடியப் போகிறது. செத்தவர்கள் செத்தார்கள்; நாசமான பொருள் கணக்கற்றவை; கட்டடங்கள் நாசமாயின; அரசாங்கத்திற்கு சரித்திரத்தில் பிரசித்திபெறும்படியான மாசு ஏற்பட்டுவிட்டது. ஆனால் தூண்டிவிட்டவர்கள், பணம் கொடுத்தவர்கள் பச்சைக் காலிகள் ஆகிய எவருக்கும் யாதொரு எறும்புகடி தொந்தரவுகூட ஏற்படப்போவதில்லை. இந்த பாதுகாப்பு அரஸ்ட்களும், வழக்கு விசாரணைகளும் காலித்தனங்களை, உயிர்ச் சேதங்களை, பண்டநாசங்களை, மக்கள் உடனே மறந்துவிடாமல் இன்னமும், சில மாதங்களுக்கு மக்கள் பேசிக்கொண்டிருக்க பிரசார பலன் பெற உதவும்; அவ்வளவுதான். இதனால் இராஜாஜி பெரிய ஹீரோ ஆகிவிட்டார்! கண்ணீர்த்துளிகள் சிப்பாய்களாகி விட்டார்கள்.......! ...னர்கள் "உலகம் யாவையும் தாமுளவாக்கலும்," என்ற கவிப்படி ஆகிவிட்டார்கள். பணங்கொடுத்தவர்கள் தங்கள் பணத்தால் எவ்வளவு காரியம் சாதிக்க முடிகிறது என்று தனது மார்பைதானே பார்த்து தலையை நிமிர்த்துக் கொள்வார்கள். கிளர்ச்சிக் காலிகள் "மறுபடியும் இப்படிப்பட்ட சந்தர்ப்பம் வராதா'' என்று அடிக்கடி பணம் கொடுத்தவர் வீட்டைச் சுற்றிக் கொண்டு திரிவார்கள். இவ்வளவுதான் ஏற்பட்டதே தவிர இந்தி எதிர்ப்பில் காரியத்தில் எவ்வித மாறுதலும் எவருக்கும் ஏற்பட்டுவிடவில்லை. "இனியும் இம்மாதிரி காலித்தனங்கள் நடவாது'' என்று உறுதி கொள்ளுவதற்கும் இல்லை; ஏனெனில் இன்னும் 6 மாதத்திற்கு இராணுவம் தேவைப்படுகிறது.

எனது நிலை

"இந்தி விஷயத்தில் நீதானே எதிர்ப்பை உண்டாக்கிறாய் இப்போது இந்திக்கு அடிமையாகி விட்டாயே" என்று பலவாறாக எனக்கு வசவு கடிதம், மிரட்டல் கடிதம் பலர் எழுதி வருகிறார்கள். நேரிலும் கேட்டார்கள். எனது நண்பர்கள் பலரும் இதே கருத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியை நான் எதிர்த்தது உண்மை! (அதுவும் நான் ஒருவனேதான் எதிர்த்தேன். பிறகு தமிழ்ப் புலவர்கள் தமிழ் புத்தகக் கடைக்காரர்கள் கூட்டு சேர்ந்தார்கள்) அதிலிருந்துதான் "தமிழ் உணர்ச்சி" என்பது தோன்றிற்று. தமிழ்ப் புலவர்களும் மதிப்புப் பெற்றார்கள். இதனால் தமிழுக்கு தமிழின்பேரால் சிலர் பிழைக்க நேரிட்டதல்லாமல் ஒரு காசு பயனும் ஏற்பட்டுவிடவில்லை. இந்தி வெறியர்கள் மாதிரி சிலர் தமிழ் வெறியரானார்கள். ஆனால் இரண்டுக்கும் பேதம் உண்டு.

இந்தியை நான் எதிர்ப்பதன் காரணம்

இன்றைக்கும் நான் இந்தியை எதிர்க்கிறேன். ஆனால் தமிழ் கெட்டுவிடுமே என்கின்ற எண்ணத்தில் நான் இந்தியை எதிர்க்கவில்லை. தமிழ் கெடுவதற்கு தமிழில் எதுவும் மீதி இல்லை. புலவர்களே தமிழைக் கெடுத்துவிட்டார்கள். மற்றப்படி தமிழ் கெடுவதற்கு சில புராணங்கள் அதுவும்.........னர் நலனுக்கு........னர் சமய— தர்ம— கலாசார— "ஆத்மார்த்த" ஆஸ்திகத்திற்கு ஆகவே உண்டாக்கப்பட்ட தத்துவங்களை வடமொழியில் இருந்து தமிழாக்கம் செய்த

பாரதம், இராமாயணம், கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடல் புராணம் சிலப்பதிகாரம் முதலிய குப்பை கூளங்கள்தான் இனி கெட்டால் கெடலாமே ஒழிய பகுத்தறிவு விஞ்ஞானம் புதிய நாகரீக வளர்ச்சி வகைகளுக்கேற்றவை தமிழில் எதுவும் இல்லை, கெடப்போகிறதில்லை.

“பழைய அரசர்கள் தமிழைக் காத்தார்கள்” என்றால் என்ன அருத்தம். புலவர்கள் புளுகை வளர்த்தார்கள் என்பதுதான் பொருள். சமயாச்சாரிகள் தமிழைக் காத்தார்கள் என்றால் என்ன பொருள்? மத மூடநம்பிக்கை குப்பை கூளங்களையும் மாசுபட்டுக் கிடந்த முட்டாள்தனமான கடவுள் கதைகளையும் புளி போட்டு விளக்கி பிரகாசமாக்கினார்கள் என்பது தவிர வேறு என்ன கருத்து காண முடியும்?

ஆனதினால் நான் தமிழ் கெட்டுவிடுமே என்று இந்தியை எதிர்க்கவில்லை. மற்றெதற்கென்றால் ஆங்கிலமே அரசியல் மொழியாக சரித்திர மொழியாக விஞ்ஞான மொழியாக, தொழில் மொழியாக, இயந்திர சாதன மொழியாக பெரியோர்கள் அறிஞர்கள் விஞ்ஞானகர்த்தாக்கள் வாழ்க்கைச் சரித்திர மொழியாக சட்ட மொழியாக சம்பிரதாய மொழியாக ஆக வேண்டும் என்பதற்கு ஆகவே இந்தியை எதிர்க்கிறேன்.

இந்திய யூனியனில் உள்ளவரை இந்தி ஒழியாது

இந்திய யூனியனில் தமிழ்நாடு இருக்கும்வரை இங்கிலீஷ் ஒருசமயம் ஒழிந்தாலும் ஒழியுமே அல்லாமல் இந்தி ஒரு நாளும் ஒழியாது. அது எங்காவது ஒளிந்து

கொண்டே இருக்கும். இன்றைக்கும் சொல்லுகிறேன் காமராஜர் கையை விட்டு, அவர் செல்வாக்கை விட்டு தமிழ்நாட்டு அரசியல் ஆதிக்கம் ....னர் கைக்குப் போய்விடுமேயானால் இன்று இந்தி எதிர்ப்பு கிளர்ச்சி நடத்திய கண்ணீர்த்துளிகள், சுதந்திராக்கள், பத்திரிகைகள் தினத்தந்தி உள்பட. ....னர்கள் இன்றுள்ள தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்கள் யாவரும் கதரைப் போலவே இந்தியை ஆதிக்கத்திற்கு கொண்டு வந்து விடுவார்கள் இது "சத்தியம்" (உறுதி! உறுதி!)

இந்தி எதிர்ப்பு அரசியல் பிரச்னையே

ஆகவே இந்தி எதிர்ப்பு என்பது "வரியை ஒழிக்கிறோம்", "ரூபாய்க்கு 3 படி அரிசி அளக்கிறோம்" என்பது போன்ற ஓர் அரசியல் பிரச்னையே ஒழிய மொழிப் பிரச்னை அல்ல.

மொழி விஷயத்தில் இராஜாஜி—........னர்கள் பத்திரிகைக்காரர்கள் போட்ட கரணங்கள் எவ்வளவு! யாருக்கும் தெரியாதா?

ஆச்சாரியார் நோக்கம் தமிழர் கல்வியை ஒழிப்பதே

பதவி கிடைத்தபோதெல்லாம் ஆச்சாரியார் இந்தியைப் புகுத்துவதையே முக்கிய கொள்கையாகவும், தமிழர் படிப்பை ஒழிப்பதையே இன்றியமையாத கொள்கையாகவும் கொண்டு ஆட்சி செலுத்தவில்லையா?

1938–ல் இந்தியை கட்டாயமாகப் புகுத்தினார்; கவர்னர் ஜெனரலாக இருக்கும்போது இந்தியை ஆட்சி மொழியாக்கினார்; மற்றும் மத்திய அரசாங்க மந்திரியாக இருக்கும்போது இந்தி படித்தவனுக்குத்தான் உத்யோகம் என்று உத்தரவு போட்டார். உத்யோகம் போனபின்பு தமிழ்நாட்டில் இங்கிலீஷ் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்ற சாக்கில் தமிழ் மக்கள் நட்பைக் கொண்டார்.

இன்றைக்கும் ஆச்சாரியார் சூழ்ச்சி மாறவில்லை

இன்றைக்கும் ஆத்மார்த்தம், வேதசாஸ்திர சம்பிரதாய, தர்மபிரசாரம் செய்துகொண்டு தமிழ்நாடு தவிர்த்த மற்ற நாடுகளில் இந்தி வெறியர்களையே சுதந்திரா (தன்) கட்சிக்கு ஆட்களாகச் சேர்த்துக் கொண்டு கணணீர்த்துளிகளை அவர்கள் அதமர்கள் என்று தெரிந்தும் கையாள்களாக வைத்துக்கொண்டு காலித்தனங்களுக்கு தலைமை வகித்து நடத்துகிறார். "தனது இலட்சியம் எந்தவிதமான அயோக்கியத்தனத்தைச் செய்தாவது ஆட்சியைக் கைப்பற்றுவதுதான்" என்று பட்டாங்கமாகப் பேசுகிறார்.

இந்த கூட்டங்களை நம்பிக்கொண்டு இந்தச் சமயத்தில் நாமும் "இந்தி வேண்டாம்" என்று கிளர்ச்சி செய்தால் நம்மைப்போல் மடையர்களை வேறு எங்கு காணமுடியும்?

காமராஜர் ஆட்சியே கஷ்டங்களை பரிகரிக்கவல்லது

நான் சுமார் இரண்டாண்டுக்கு முன்னாலேயே பொதுமக்களுக்கு என் கருத்தை தெரிவித்திருக்கிறேன். அதாவது:

"காமராஜர் ஆட்சி அவசியமா? இந்தி ஒழியவேண்டியது அவசியமா?" என்று என்னை யாராவது கேட்டால் "காமராஜர் ஆட்சிதான் அவசியம்" என்று பலமாகச் சொல்வேன். காமராஜர் ஆட்சி நிலைத்தால் இந்தித் திணிப்பை மாத்திரமல்ல; மற்றும் அநேக காரியங்களை ஒழித்துக்கட்டலாம்.

இனியும் ஒரு 5 அல்லது 10 ஆண்டுகளில் இதன் இரகசியத்தை பார்க்கலாம்.

—

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி

(ஓர் நிலைமை விளக்கம்)

1

பெரியார் ஈ.வெ.ரா

உண்மை விளக்கம் பதிப்பகம்.
சென்னை